### பழமொழியாகமம் 25:28

சுற்று மதிலின்றி திறக்கப் பட்ட நகரம் எவ்வாறே, அவ்வாறாம் பேசுகையில் தன் புத்தியை அடக்க மாட்டாத புருஷன்.

### தீமோத்தேயு 2 1:7

ஏனெனில், சர்வேசுரன் நமக்குப் பயத்தின் இஸ்பிரீத்துவைக் கொ டாமல், தைரியம், சிநேகம், மனஅமைதி என்பவற்றின் இஸ்பிரீத்துவைக் கொடுத் திருக்கிறார். (உரோ. 8:15.)

### பழமொழியாகமம் 16:32

வல்லவனை விடப் பொறுமை சாலி உத்தமன்; நகரங்களை முற்றிக் கையிட்டவனைவிடத் தன் மனதை ஆய்பவன் உத்தமன்.

### பழமொழியாகமம் 18:21

மரணமுஞ் சீவியமும் நாவிலிருந்து அதை நேசிக்கிறவர்களே அதின் கனிகளைத் தின்பார்கள்.

### கலாத்தியர் 5:22-23

இஸ்பிரீத்துவின் கனிகள் ஏதென் றால்: பரம அன்பு, சந்தோஷம், சமாதானம், பொறுமை, தயாளம், நன்மைத்தனம், சகிப்பு, சாந்தம், விசுவாசம், அடக்க வொடுக்கம், இச்சையடக்கம், நிறைகற்பு இவைகளாம். இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணமில்லை.

### இராயப்பர் பொது நிருபம் 2 1:5-7

அப்படியிருக்க, நீங்களும் உங்களாலான முயற்சியெல்லாஞ் செய்து உங்கள் விசுவாசத்தோடு புண்ணியத்தையும், (கலாத். 5:22.) புண்ணியத்தோடு விவேகத்தையும், விவேகத்தோடு இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடு பொறு மையையும், பொறுமையோடு பக்தி யையும், பக்தியோடு சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடு தேவ சிநேகத்தையும் சேர்த்து அநுசரியுங்கள்.

### தெசலோனிக்கேயர் 1 5:6

ஆகையால் மற்ற மனுஷர்களைப்போல் நித்திரைபோகாமல், விழிப்புள்ளவர்களும், மனமயக்கமற்றவர்களுமாய் இருப்போமாக.

இயாகப்பர் பொது நிருபம் 1:19

எனக்கு மிகவும் பிரியமான சகோதரரே, இதை நீங்கள் அறிந்திருக் கிறீர்கள். எந்த மனிதனும் கேட்கிறதுக்குத் தீவிரமாயிருக்கக்கடவான்; பேசுகிறதற்கும் கோபிக்கிறதற்குமோ தாமதம் பண்ணக்கடவான். (பழ. 17;27.)

கொரிந்தியர் 1 10:13

மனுஷசுபாவத்துக்குரிய சோ தனையேயன்றி வேறொன்றும் உங்களுக்கு நேரிடாதிருப்பதாக. சர்வேசுரன் பிரமாணிக்கமுள்ளவர்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடார். ஆனால் நீங்கள் சோதனையைத் தாங்கும்படி சோதனையோடு வழியும் பண்ணுவார்.

கொரிந்தியர் 1 9:27

ஆனால் மற்றவர்களுக்குப் பிரசங்கித்தபிறகு நானே ஒருவேளை தள்ளுண்டவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தைத் தண்டித்துக் கீழ்ப்படுத்து கிறேன். (உரோ. 8:13; 13:14.)

தீத்துவுக்கு எழுதிய நிருபம் 2:11-12

ஏனெனில் நமது இரட்சகராகிய சர்வேசுரனுடைய வரப்பிரசாதம் சகல மனிதருக்கும் வெளியாகி, (தீத்து. 3:4.) நாம் அவபக்தியையும், இலௌகீக இச்சைகளையும் வெறுத்து விட்டு, இவ்வுலகத்தில் மன அமைதி யோடும், நீதியோடும், பக்தியோடும் நடக்கவும்,

உரோமாபுரியார் 1 12:2

நீங்கள் இவ்வுலகத்துக்கு ஏற்றபடி நடவாமல், சர்வேசுரனுடைய சித்தத் துக்கு இன்னது நலமாகவும், பிரிய மாகவும், உத்தமமாகவும் இருக்கிற தென்று அறிந்துகொள்ளும்படி உங்கள் மனதைப் புதிப்பித்து, உங்களைச் சீர்திருத்திக்கொள்ளுங்கள். (எபே. 5:17; 1 தெச. 4:3.)

கொரிந்தியர் 1 9:25

பந்தயக் களரியிலே மல்லுக்கட்டு கிறவர்கள் எல்லாக் காரியங்களிலும் இச்சையை அடக்குகிறார்கள். அவர்கள் அழிந்துபோகிற முடியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றே அப்படிச் செய்கிறார்கள். நாங்களோ அழியாத முடியைப் பெற்றுக்கொள்ளும்படி பிரயா சப்படுகிறோம். (2 தீமோ. 2:5.)

## எபேசியர் 6:12

ஏனெனில் நமக்குள்ள போராட்டம் மாம்சத்தோடும், இரத்தத்தோடு மல்ல; துரைத்தனங்களோடும் வல்லமைகளோடும் இந்த அந்தகார உலகாதி பதிகளோடும், ஆகாசமண்டலங்களி லுள்ள அக்கிரம அஷரூபிகளோடும் நாம் போராடவேண்டியிருக்கிறது. ழூழூழூ 12. ஆகாச மண்டலம் என்பது வானமண்டலங்களின் கீழ்ப்பாகங்களாம். இவைகளில் சர்வேசுரன் தமது திருவுளத்தின்படிக்கு கெட்ட அஷரூபிகளை உலாவும்படி சிலவிசைகளில் உத்தரவு தருகிறார். நமது ஞான யுத்தம் மனிதரோடு அல்ல, கெட்ட அஷரூபிகளோடுதான்.

## யோபாகமம் 31:1

கன்னிப் பெண்களின் மேல் சிந்தனை முதலாய் எனக்கு வராத படிக்கு நான் என் கண்களோடு உடன்படிக்கை பண்ணியிருந்தேன்.மீ

## அருளப்பர் 2-ம் நிருபம் 1:8

நீங்கள் செய்த வேலையை இழக்காமல், அதன் பூரண சம்பாவனையைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு எச்சரிக்கை யாயிருங்கள். (அரு. 8:31.)

## பழமொழியாகமம் 12:16

மதிகேடன் தன் கோபத்தை உடனே காட்டுகிறான்; பொல்லாப் பைச் சட்டை பண்ணாதவன் ஞான முள்ளவனாம்.

## பழமொழியாகமம் 4:27

வலத்திலும் இடத்திலுந் திரும் பாதே; உன் பாதத்தையுந் தின்மை யினின்று விலக்கு; ஏனெனில், வலத் திலிருக்கின்ற வழிகளை ஆண்டவர் அறிகிறார்; இடத்திலிருக்கின்ற வையோ பொல்லாதவைகளாயிருக் கின்றன; ஆனால் அவர் உன் நடைகளைச் செவ்வையாக்குவார்; உன்னைச் சமாதானத்தில் நடத்து வார்.